செ.வெ.எண்.31
நாள்.19.03.2018

பத்திரிக்கைச் செய்தி

## 2017–2018ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான அரசு அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

2017–2018ஆம் ஆண்டிற்கு மாவட்டத்தில் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அனைத்து அரசுத்துறை அலுவலர் பணியாளர்களுக்கான மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகள் கடலூர் அண்ணா விளையாட்டரங்கில் 24.03.2018 அன்று காலை 9.00 மணிக்கு நடைபெற உள்ளது.

ஆண்களுக்கான தடகளப் போட்டிகளில் 100 மீ, 200 மீ, 800 மீ, 1500 மீ ஓட்டம், நீளந்தாண்டுதல், உயரந் தாண்டுதல், குண்டு எறிதல் மற்றும் 4 x 100 மீ தொடரோட்டமும், பெண்களுக்கான தடகளப் போட்டிகளில் 100 மீ, 200 மீ, 400 மீ, 800 மீ ஓட்டம், நீளந்தாண்டுதல், உயரந்தாண்டுதல், குண்டு எறிதல் மற்றும் 4 x 100 மீ தொடரோட்டமும் நடைபெறவுள்ளது. குழுப்போட்டிகளான இறகுப்பந்து, கூடைப்பந்து, டென்னிஸ், கபாடி, டேபிள் டென்னிஸ் மற்றும் வாலிபால் போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலருக்கு நடத்தப்படவுள்ளது. கால்பந்துப் போட்டிகள் ஆண்களுக்கு மட்டும் நடத்தப்படவுள்ளது.

மாவட்ட அளவிலான தடகளப் போட்டியில் முதலிடம் பெறும் விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் மற்றும் குழுப்போட்டிகளில் சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கொண்ட அணிகள் மட்டுமே மாநில அளவில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்துகொள்ளலாம். மாவட்ட அளவில் வெற்றிபெற்ற அரசுத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு மாவட்ட விளையாட்டு பிரிவின் மூலம் விளையாட்டு சீருடை வழங்கப்பட்டு, மாநில அளவிலான போட்டிகளில் கலந்துகொள்ளலாம்.

மாவட்ட அளவிலான போட்டியில் கலந்து கொள்ளும் அரசுத் துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு போட்டி நடைபெறும் நாளன்று சிறப்பு தற்செயல் விடுப்பு அந்தந்த துறை தலைவர் மூலம் வழங்கப்படும். மாவட்ட அளவிலான அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள கீழ்க்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்படும்.

- இப்போட்டிகளில் தமிழ்நாடு மாநில அரசுத் துறை பணியாளர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம். காவல் துறை அலுவலகங்கள், காவல் துறை தலைவர் அலுவலகம், காவல் துறை துணை தலைவர் அலுவலகம் ஆகியவற்றில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்கள் இப்போட்டிகளில் கலந்துகொள்ள தகுதியுடைவர் ஆவர். இப்போட்டிகளில் அரசுத் துறைகளில் நிரந்தரப் பணியாற்றும் பணியாளர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகளில் கலந்துகொள்ள விளையாட்டு அலுவலர்கள், விளையாட்டு கற்பிப்பாளர்கள், கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள், விளையாட்டு பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் ஆகியோர் தகுதியுடைவர் ஆவர்.

- அரசு சார்ந்த தன்னாட்சி நிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் இப்போட்டிகளில் கலந்துகொள்ள தகுதியற்றவர் ஆவர். சீருடைப் பணியாளர்கள், பேரா மிலிட்டரி, காவல்துறை மற்றும் தீயணைப்புத்துறை வீரர்கள் இப்போட்டிகளில் கலந்துகொள்ள தகுதியற்றவர் ஆவர்.

- அரசுத்துறைகளில் பணிபுரியும் தற்காலிகப் பணியாளர்கள் இப்போட்டிகளில் கலந்துகொள்ள தகுதியற்றவர் ஆவர். புதிதாக அரசுத்துறைகளில் பணியில் சேர்ந்து 6 மாதத்திற்குள் பணியாற்றுபவர்கள் இப்போட்டிகளில் கலந்துகொள்ள தகுதியற்றவர் ஆவர்.

எனவே, 24.03.2018 அன்று காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ள மாவட்ட அளவிலான அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் கடலூர் மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து அரசுத் துறை பணியாளர்களும் இப்போட்டிகளில் அதிக அளவில் கலந்துகொண்டு போட்டிகளை சிறப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கடலூர்.

2/2

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்.